யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 09
**First Term Examination – 2020 – Grade 09**

| | | | | |
|---|---|---|---|---|
| வரலாறு | 33 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |

சுட்டெண் Index No

## வரலாறு

### பகுதி - I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1. இலங்கையின் கரையோரப்பிரதேசத்தை முதன் முதலில் கைப்பற்றிய ஐரோப்பியர் யார்
   1. ஒல்லாந்தர் 2. ஆங்கிலேயர் 3. பிரான்சியாத் 4. போர்த்துக்கேயர்

2. ஒல்லாந்தர் சார்பாக இலங்கைக்கு வருகை தந்த முதலாவது தூதுக்குழு எது?
   1. ஸ்பில்போயன் 2. யெராட் கல்பெட்
   3. கலன்அல்பஸ் 4. கொர்னேலியஸ் டெகல்

3. கொழும்பு கோட்டையை கைப்பற்றிய ஒல்லாந்து தளபதி
   1. கலன் அல்பஸ் 2. யெராட்கல்ப்ட்
   3. ஸ்பில்பேயன் 4. கொர்னேலியஸ் டெகல்

4. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையில் முதன் முதலில் வந்திறங்கிய இடங்களை ஒழுங்காகக் காட்டுவது
   1. கண்டி, காலி, மட்டக்களப்பு 2. காலி, திருகோணமலை, கண்டி
   3. காலி, மட்டக்களப்பு, திருகோணமலை 4. திருகோணமலை, கொழும்பு, காலி

5. 1762இல் யோன்பைபஸ் பிரித்தானிய தூதுக்குழுவை சந்திதத் கண்டி மன்னன் யார்
   1. 1ம் விமலதர்மசூரியன் 2. 2ம் இராஜசிங்கன்
   3. 2ம் விமலதர்ம சூரியன் 4. கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன்

6. 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒல்லாந்து எந்த நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.
   1. போரர்த்துக்கல் 2. இங்கிலாந்து 3. ஸ்பானியா 4. பிரான்ஸ்

7. போர்த்துக்கேயர் ஒல்லாந்தரின் கீழைத்தேய தலைமையகத்தை ஒழுங்காகக் காட்டுவது
   1. சூரத், கோவா 2. கோவா, பத்தேவியா
   3. பத்தேவியா, கோவா 4. சூரத், சென்னை

8. கி.பி 1638ம் ஆண்டு இடம்பெற்ற உடன்படிக்கையில் கையொப்பமிட்ட கண்டி மன்னன் யார்
   1. 2ம் இராஜசிங்கன் 2. 1ம் விமலதர்ம சூரியன்
   3. 2ம் விமலதர்ம சூரியன் 4. குண்டசாலை மன்னன்

9. குண்டசாலை மன்னனின் மனைவியின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்க கி.பி 1721இல் வருகை தந்த ஒல்லாந்த தூதுவன் யார்?
   1. ஸ்பில் பேஜன் 2. கலன் அல்பஸ்
   3. கொர்னேலியஸ் டெகால் 4. ஜெராட்கல்ப்ட்

10. ஒல்லாந்து நீதிமன்றத் தொகுதியின் உயர் நீதிமன்றமாக விளங்குவது.
    1. சிவில் ராத் நீதிமன்றம்
    2. ராத்வான் ஜஸ்ரிட் மேல் நீதிமன்றம்
    3. வான்ராத் நீதிமன்றம்
    4. பிஸ்கல் நீதிமன்றம்

11. தோம்பு என்ற பதிவேட்டினை முதன்முதல் தயாரித்த ஐரோப்பியர் யார்?
    1. போர்த்துக்கேயர்
    2. ஒல்லாந்தர்
    3. ஆங்கிலேயர்
    4. பிரான்சியர்

12. கி.பி 1797ம் ஆண்டு கிளர்ச்சியை ஆய்வு செய்ய வந்தவர் யார்
    1. ஜோன் பைபஸ்
    2. மெக்ரோவால்
    3. கியூபொயிட்
    4. மியூரன் குழு

13. 1798 – 1802 வரை இரட்டை ஆட்சி இடம் பெற்ற போது ஆளுனராக இருந்தவர்
    1. பிரற்றிக் நோத்
    2. றொபேட் பிரவுண்ரிக்
    3. தோமஸ் மெயிட்லண்ட்
    4. எட்வேட் பான்ஸ்

14. ஆளுனர் ரொபேட் பிரவுண்ரிக்கின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வு
    1. 1818 முதலாவது சுதந்திர போராட்டம் இடம்பெற்றது
    2. 1803 இல் கண்டி மீதான படையெடுப்பு
    3. 1796 இல் கரையோரம் கைப்பற்றப்பட்டமை
    4. 1815 கண்டி இராச்சியம் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்டமை

15. சிவில் சேவை உத்தியாகத்தரான ஜோன் டொயிலியை நியமித்த ஆளுனர் யாா
    1. பிரட்ரிக் நோத்
    2. தோமஸ் மெயிட்லண்ட்
    3. எட்வேட் பான்ஸ்
    4. றோபேட் பிரவுன்றிக்

16. கண்டி உடன்படிக்கைக்கு முன்னர் பிரித்தானிய கொடியேற்றப்பட்டபோது தடுத்து நிறுததியவர்யாார்
    1. கிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர்
    2. வலானே சித்தார்த்த தேரர்
    3. வாரிய பொல ஸ்ரீ சுமங்கல தேரர்
    4. மீகட்டுவத்தை குணானந்ததேரர்

17. 1848ம்ஆண்டு 2ம் சுதந்திரப் போராட்டத்திற்கு காரணமான வரிகளின் தொகுதி
    1. தென்னைவரி, மீன்வரி, உப்புவரி
    2. நாய்வரி, தென்னை வரி, மீன்வரி
    3. தோணி வரி, மீன்வரி, ஆள்வரி
    4. தோணி வரி, துவக்கு வரி, நாய் வரி

18. 1848ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கு மத்திய நிலயமாக திகழ்ந்த இடம்
    1. மாத்தளை
    2. காலி
    3. கண்டி
    4. கொழும்பு

19. 1818ம் ஆண்டு 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டங்களின் போது ஆளுனராக இருந்தவர்களை ஒழுங்காகக் காட்டுவது
    1. தோமஸ் மெயிட்லண்ட், றோபேட் பிரவுன்றிக்
    2. றொபேட் பிரவுன்ரிக், டொரிங்டன்
    3. பிரட்ரிக் நோத், தோமஸ் மெயிட்லண்ட்
    4. எட்வேட் பான்ஸ், றொபேட் பிரவுன்றிக்

20. 1818ம் ஆண்டு முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய முன்னனித்தலைவர் யார்?
    1. மடுகஸ்ஸே திஸாவை
    2. கெப்பட்டிபொல நிலமே
    3. பூட்டாவே றட்டேராவ
    4. வீரன்புரனப்பு

(20×2= 40 புள்ளிகள்)

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையையும் குறித்துக்காட்டும் ஆங்கில எழுத்தையும் தருக.

1. காலி
2. கண்டி
3. மணற்காடு
4. மட்டக்களப்பு
5. வெல்லச




1. போர்த்துக்கேயர் முதன்முதலில் வந்திறங்கிய இடம்
2. 1815இல் ஆங்கிலேயர் கைப்பற்றிய இராச்சியம்
3. வடமராட்சியில் ஒல்லாந்தரால் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தின் சிதைவு காணப்படும் இடம்
4. ஒல்லாந்தரின் முதல் தூதுக்குழுவான ஸ்பில்பேஜன் வந்திறங்கிய இடம்
5. கி.பி1818ம் ஆண்டு முதலாவது சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்த இடம் எது?

(10 புள்ளிகள்)

02. 1. இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்த தூதுக்குழுக்கள் மூன்று தருக.
2. ஒல்லாந்தர் மன்னனுக்கு வழங்கிய பரிசில்கள் மூன்று தருக.
3. 1. கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த நாயக்க வம்ச மன்னர்கள் இருவரைத்தருக.
   2. கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் முரண்பாடு ஏற்படும் போது இணக்கப்பாட்டை ஏற்படுத்திய இரு நிகழ்வுகளைத் தருக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

03. 1. ஒல்லாந்தரின் முறையான தோம்புகள் மூன்றையும் தருக
2. ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இருந்த பிரதேசங்களின் மூன்று முக்கிய பிரிவுகளையும் தருக.
3. கி.பி1638ம் ஆண்டு உடன்படிக்கையில் கூறப்பட்ட மூன்று அம்சங்களையும் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

04. 1. A - ஸ்பானியரின் அரச மதம்
   B – ஒல்லாந்தரின் அரச மதம்
   C – 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் போது ஆளுனராக இருந்தவர்.
2. ஒல்லாந்தரால் அறிமுகப்படுத்திய நீதி மன்ற தொகுதிகள் மூன்று தருக.
3. இலங்கையின் பொருளாதார விருத்திக்கு ஒல்லாந்தர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

05. 1. இலங்கையின் கரையோரத்தை கைப்பற்றுவதற்காக வருகை தந்த பிரித்தானிய தூதுக்குழுக்கள் மூன்று தருக.
2. இலங்கை மீது பிரித்தானியர் கவனம் செலுத்த ஏதுவான காரணங்கள் மூன்று தருக.
3. கி.பி1797 இல் கிளர்ச்சி ஏற்பட ஏதுவான காரணம் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

06. 1. கி.பி 1818 ஆம் ஆண்டு முதலாவது சுதந்திர போராட்டம் ஏற்பட ஏதுவான காரணங்கள் 3 தருக.
2. கி.பி 1803 ஆண்டு கண்டி மீதான படையெடுப்பு தோல்வியில் முடிவடைய ஏதுவான காரணம் மூன்று தருக.
3. கண்டி இராச்சியம் 1815 இல் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைய ஏதுவான காரணம் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

07. 1. இலங்கையில் பயிரிடப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் மூன்று தருக.
2. 1848ம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்கு ஏதுவான முக்கிய காரணங்கள் இரண்டு தருக.
3. 1. கி.பி 1848ம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்திற்கு ஏதுவான முக்கிய காரணங்கள் இரண்டு தருக.
   2. கி.பி 1848ம் ஆண்டு சுதந்திரப்போராட்டம் தோல்வியில் முடிவடைய ஏதுவான காரணம் இரண்டு தருக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)